செ வெண் 618 நாள்: 9/9/16 1/3

# பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது 2016-2017

*****

## மத்திய கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணையக உதவி இயக்குநர் தகவல்

*****

1. தமிழ்நாட்டிலுள்ள கைவினைஞர்களின் கைத்தொழில் திறமையினை வெளிக்கொணர்ந்து அவர்களை கௌரவித்து பாராட்டுக்கள் வழங்கவும் மேலும் அவர்களை ஊக்குவிப்பதற்காகவும் தமிழ்நாடு கைத்திறன் தொழில்கள் வளர்ச்சிக் கழகம் "பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது" என்ற விருதினை 2011-12 ஆண்டு முதல் வழங்கி வருகிறது. நடப்பு ஆண்டு 2016-2017ஆம் ஆண்டு விருதிற்கான விண்ணப்பங்கள் வரவேற்கப்படுகின்றன.

2. இவ்விருதில் 85 கைவினைஞர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு தலா ரூ.5,000/- ரொக்க பரிசு, ஒரு வெள்ளிப் பதக்கம் மற்றும் ஒரு சான்றிதழும் அளிக்கப்படும்.

3. கீழ்க்கண்ட 16 கைத்திறத் தொழில்களில், முதல் 15 கைத்திறத் தொழில்களில் தலா 5 கைவினைஞர்களுக்கு (ஒரு பெண் கைவினைஞர் உட்பட) மேற்படி விருது வழங்கப்படும்.

   வரிசை எண். 16-ல் உள்ள இதர கைவினைப் பொருட்களில் 2 பெண் கைவினைஞர்கள் உட்பட 10 கைவினைஞர்களுக்கு இந்த விருது வழங்கப்படும்..

   1. பஞ்சலோக சிலைகள், 2. பித்தளை விளக்குகள் மற்றும் பித்தளை கலைப்பொருட்கள், 3. தஞ்சாவூர் ஓவியங்கள், 4. தஞ்சாவூர் கலைத்தட்டுகள், 5. மரச்சிற்பங்கள் 6. கற்சிற்பங்கள், 7. சுடுகளிமண்,

8. கலம்காரி, பத்திக் மற்றும் அப்ளிக் வேலைகள், 9. காகிதகூழ் பொம்மைகள், 10. பாய் நெசவு, 11. மூங்கில் மற்றும் பனைஓலை பொருட்கள், 12. நெட்டி வேலைப்பாடு 13. நார்பொருட்கள், 14. கோவில் நகைகள், 15. சித்திரத் தையல் வேலை மற்றும் 16. இதர கைவினைப் பொருட்கள்.

4. ஏற்கனவே பூம்புகார் மாவட்ட கைத்திறன் விருது பெற்றவர்கள் திரும்பவும் கலந்து கொள்ளக்கூடாது.

5. கைவினைஞர்களின் அனுபவம் மற்றும் அவர் தம் தொழிலில் ஆற்றியுள்ள சேவை மற்ற சிறப்பு அம்சங்களும் தேர்ச்சியின் போது கவனத்தில் கொள்ளப்படும்.

6. தமிழ்நாட்டைச் சேர்ந்த கைவினைஞர்கள் மட்டுமே இத்தேர்வில் கலந்து கொள்ளலாம்.

7. விதிமுறைகள் மற்றும் விண்ணப்பபடிவம் ஆகியவற்றை உதவி இயக்குனர் கைவினைப்பொருட்கள் விற்பனை மற்றும் சேவை விரிவாக்க மையம், சிவராஜ் பில்டிங், மணிமேடை, நாகர்கோவில் (தொலைபேசி:04652-232361) என்ற முகவரியில் இருந்து நேரில் இலவசமாக பெற்றுக்கொள்ளலாம்.

8. தேர்வில் கலந்துகொள்ளும் கைவினைஞர்கள் விண்ணப்பத்துடன் கீழ்க்கண்ட ஆவணங்களை கண்டிப்பாக இணைத்து குறிப்பிட்ட தேதிக்குள் அனுப்ப வேண்டும்.

அ. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பத்தில் ஒட்டிய புகைப்படத்துடன் விண்ணப்பதாரரின் மற்றொரு புகைப்படமும் இணைக்கப்பட வேண்டும்.

ஆ. பரிந்துரைச் சான்றிதழில் கீழ்கண்டுள்ள விவரங்கள் தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். (கைத்திறன் தொழில் பெயர் மற்றும் கைவினைப் பொருட்களின் பெயர்)

இ. பத்து ரூபாய் முத்திரைத்தாளில் கைவினைஞரின் உறுதிமொழி பத்திரம், முதல் வகுப்பு குற்றவியல் நீதிபதி அல்லது சான்றுறுதி அலுவலர் (Notary Public) கையொப்பத்துடன் விண்ணப்பிக்கவும்

ஈ. தேர்வுக்கு வைக்கப்பட வேண்டிய கைவினைப் பொருள் மற்றும் அதன் புகைப்படம்

உ. இருப்பிட முகவரிக்கான அத்தாட்சி (குடும்ப அட்டை/ வாக்காளர் அடையாள அட்டை/ ஓட்டுநர் உரிமம்/ புகைப்படத்துடன் கூடிய வங்கி கணக்கு புத்தகம்) ஆகியவற்றின் ஏதாவது ஒன்றின் நகல்.

9. பூர்த்தி செய்யப்பட்ட விண்ணப்பப் படிவங்கள் மற்றும் மாதிரிப் பொருட்கள் மேற்கொண்டுள்ள பூம்புகார் 759, அண்ணா சாலை, சென்னை-2 தலைமை அலுவலகத்திற்கு வந்து சேரவேண்டிய கடைசி நாள் 21.09.2016 (புதன்கிழமை மாலை 5.00 மணி வரை (அலுவலக நாட்கள் திங்கள் முதல் வெள்ளி வரை).

> இவ்வாறு மத்திய கைவினைப் பொருட்கள் வளர்ச்சி ஆணையத்தின் உதவி இயக்குநர் திரு. L. பாலு வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் தெரிவித்துள்ளார்.

வெளியீடு: செய்தி-மக்கள் தொடர்பு அலுவலர் நாகர்கோவில்

L. BALU
Assistant Director (H)
Office of the Development Commissioner
(HANDICRAFTS), HM & SEC,
Ministry of Textiles, Govt. of India,
Shivaraj Building, Nagercoil - 629 001